# Children's Well-wishers Network (CWN)

## அறக்கட்டளை (இல: 1154410)

# CWN Mathematics Challenge 2015

## கணிதப் போட்டி 2015

இக் கணிதப் போட்டி 01/09/2000 இற்கும் 31/08/2009 இற்கும் (Year 1 - Year 9) இடையில் பிறந்த எம் மாணவருக்கானது. இம்முறை நீங்கள் உங்கள் விண்ணப்பங்களையும் கட்டணங்களையும் online இல் இலகுவாக செய்து கொள்ளுவதோடு அதற்குரிய உறுதிப்படுத்தலையும் உடனே பெற்றுக் கொள்ள முடியும்.

இப் போட்டி இங்கிலாந்தில் வாழும் எம் இன மாணவரின் கணித, எண்ண வளர்ச்சிக்காகவும் அதே சமயம் இலங்கை வாழ் தாயக தமிழ் சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் 2012 இலிருந்து நாம் எடுத்துக் கொண்டு வரும் ஒரு சிறு முயற்சி. எமது அற முயற்சிகளை எம் இணையத் தளத்தில் பார்வை இடலாம்.
எமது நேர்மையான அரசியல் சார்பற்ற சேவை பிரதேச, மத பாகுபாடுகட்கு அப்பாற்பட்டது.

இக் கணிதப் போட்டியின் விண்ணப்ப முடிவு திகதி : 6 March 2015. கட்டணம் : £10.

பரீட்சை நேரம் : மதியம் 14:30 Saturday 16 May 2015

இப் போட்டியில் உங்கள் முன்கூட்டிய விண்ணப்பம் முல்லைத்தீவில் வறுமைக் கோட்டின் கீழ் பரிதவிக்கும் எம் இலங்கைத் தமிழ் மாணவருக்கு காலதாமதமின்றி விரைவில் ஒரு முன் பள்ளி அமைக்க உதவும்.

தற்போதைய பரீட்சை தளங்கள்: Alperton, Birmingham, Coventry, Croydon, Doncaster, Enfield, Gloucester, Greenford, Harrow, Ilford, Leicester, Southall, Sutton, Sydenham, Tooting, Walthamstow

பரிசில்கள், சான்றிதல்கள், online விண்ணப்பம், விதிமுறைகள் 2012 இல் இருந்து நம்மால் நடாத்தப்பட்ட எமது பழைய வினாத்தாள்கள், எம் சேவை விபரங்கள், நன்கொடைகள், கணக்கு விபரங்கள் அனைத்தையும் அறிய எமது இணைய தளத்தை அணுகவும். நாம் ஒரு அறக்கட்டளை. நாம் மற்ற அறக்கட்டளை களுடன் சேர்ந்து பணி புரிகிறோம். எமது ஒரே ஒரு இணைய தளம் 2012 இலிருந்து: www.cwnetwork.co.uk

மேலும் பரிசில்களோடு தனியே நின்றுவிடாது பரீட்சைக்கு பின் நடாத்தப்படும் Feedback session இல் உங்கள் பிள்ளைகளின் விடைத்தாள்களை பார்வையிடவும், பரீட்சை வினாக்களுக்கு (2012 இல் இருந்து செய்து வருபது போன்று) ஆசிரியர் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மூலம் விளக்கமும் கொடுக்கப்படும்.

எமது சிறுவர் நலன்புரிவோர் வலையமைப்பு பாரபட்சமற்ற இலாப நோக்கற்ற அரசியல் சார்பற்ற நாணயமான வெளிப்படைத்தன்மை பொருந்திய ஒரு கல்வி அறக்கட்டளை அமைப்பு. எமது தொண்டின் பலன் குறிப்பாக துன்பப்பட்ட வசதியற்ற தமிழ் சிறுவருக்கானதெனினும், எமது கல்விப் பணி என்பது எல்லா மாணவருக்கும் உரியது.

எம்முடன் சேர்ந்து எமது கொள்கைகளுடன் தொண்டு புரிய விரும்புவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்:

Email: cwnmaster@gmail.com Tel: 07891547787

நன்றி.